PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# அறுமுகனம் தோற்றம் வளர்ச்சி நிலைகள்

**முனைவர் ச. முரளி[1] & க. உஷா[2]**

**[1]தவில் உதவிப்பேராசிரியர்**

**[2]முனைவர் பட்ட ஆய்வாளர்**

**இசைத்துறை**

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**ஆய்வு நோக்கம்**

புதுச்சேரியில் தோன்றிய 'அறுமுகணம்' என்ற புதிய தாள இசைக்கருவியைப் பற்றிய முழு விளக்கங்களையும் இசைக் கலைஞர்களும் இசைப் பயிலும் மாணவர்களும் அறிந்துக்கொள்ளும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**திறவு சொற்கள்:** புதுச்சேரி, தாள இசைக்கருவி, ஆறு முகம், வில் வடிவம், புதுவரவு

## முன்னுரை

ஆறு முகங்களைக் கொண்ட ஒரு அழகிய வாத்தியம் அறுமுகனம் இசைக்கருவியாகும். ஒரே வாத்தியத்தில் மூன்று ஸ்தாயிகளை உடைய வாத்தியம். இந்த இசைக் கருவி தாளவாத்தியக் கருவியாகும். இதன் தோற்றம், வளார்ச்சி நிலை, பெயர் விளக்கம், ஆறு முகங்களின் விளக்கம், அறுமுகனத்தின் தனித்தன்மைகள், உருவான விளக்கங்கள், உருவாக்கியவரின் விளக்கம், உருவாக்கும் முறை, பயன்பாடுகள் மற்றும் மாமேதைகளின் கருத்து குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## அறுமுகனத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

### அறுமுகனம்

ஆறு முகங்களைக் கொண்ட தாள இசைக் கருவியான அறுமுகனத்தின் விரிவாக்கத்தைப் பார்ப்போம்.

### அறுமுகனத்தின் பெயர் விளக்கம்

அறுமுகனம் என்பது தமிழ் பெயராகும். முகன் என்பது அழகான முகத்தைக் குறிக்கும். அறுமுகனம் என்பது ஆறு முகங்கள் கொண்ட அழகான வடிவம் என்பது பொருள். அறுமுகனத்தின் அமைப்பு, சூரியனின் உதயகாலத் தோற்றத்தை ஒத்துக் காணப்படுகிறது. பொதுவாக கலைஞர்களுக்கு உதய காலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காலைப்பொழுதில் சாதகம் செய்யும் பொழுது மனதில் நன்றாக

அக்கலை பதிந்துவிடுகிறது. மேற்கூறிய காரணங்களை கண்ணுற்றால் அவ்வாத்தியத்திற்கு அறுமுகனம் என்று பெயர் சூட்டியது சாலப் பொருத்தமானதாகும். மற்றொரு கண்ணோட்டத்தில் பார்த்தோமேயானால் இந்த வாத்தியம் வாசிக்கும் பொழுது, மயில் தோகை விரித்து ஆடுவது போல் காட்சியளிக்கிறது.

**அறுமுகனத்தின் தோற்றம்**

1. அறுமுகனம் என்பது ஓரு தாளவாத்திய இசைக்கருவி ஆகும்.
2. இதனைக் கண்டுபிடித்து வடிவமைத்து உருவாக்கியவர் கலைமாமணி முனைவர் சு.கோபகுமார் அவர்கள், இவர் பாரதியார் பல்கலைக்கூடத்தில் இசைத்துறையில் மிருதங்க துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.
3. இந்த வாத்தியத்தை முதன்முதலில் டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி 2001-ஆம் ஆண்டு மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு.N.ரங்கசாமி அவர்கள் தலைமையிலும், தலைச்சிறந்த இசைவல்லுநர் டாக்டா. B.M. சுந்தரம் அவர்கள் முன்னிலையிலும் பெரும் திரளான கலாரசிகர்கள் மற்றும் பொது மக்கள் மேற்பார்வையிலும் அறிமுகம் செய்யப்பட்டது.
4. இவ்வாத்தியத்தை இசைத்து விளக்கவுரை நிகழ்த்திய கலைமாமணி டாக்டர் திரு.சு.கோபகுமார் அவர்கள், நிகழச்சியில் பங்கு கொண்டு கலை வல்லுநர்களின் பாராட்டைப் பெற்றார்.
5. இவ்வாத்தியத்தை இசைத்து மகிழ்ந்த மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்கள் புதுச்சேரி மாநிலத்தின் வாத்தியமாக இதனை அறிவித்தார்.

**அறுமுகனத்தின் தனித்தன்மைகள்**

இது மூன்று மண்டிலங்களில் (ஸ்தாயி) அமைந்த வாத்தியம் (வலிவுமண்டிலம், சமமண்டிலம், மெலிவுமண்டிலம்) என்பதால் இதனைத் தனித்தும் மற்ற தாளவாத்தியங்களுடன் இணைந்தும் வாசிக்கலாம். இதனை நாட்டியத்திற்கும் நாட்டுப்புற இசை, மேற்கத்திய இசை, கர்நாடக இசை, (செவ்விசை) இந்துஸ்தானி இசை, பியூசன் போன்ற அனைத்து இசை நிகழ்ச்சிகளுக்கும் வாசிக்கலாம். இது அறுமுகனத்தின் தனிச்சிறப்பாகும்.

மிருதங்கம் போன்ற தாளவாத்தியங்களில் சாப்பு (வலந்தலையில் வாசிக்ககூடிய முறை) மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த சாப்பை இந்த அறுமுகனத்தில் இரண்டு கைகளினாலும் வாசிக்கலாம். அறுமுகனம் தாங்கிகளைக்

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

கொண்டு அமைக்கப்படுவதால் அவரவர் வசதிக்கு ஏற்றாற்போல் நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும் வாசிக்கலாம். நாம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்போது அறுமுகனத்தின் ஒவ்வொரு முகத்தையும் தனித்தனியே பிரித்து ஒரு பெட்டியில் வைத்து, எடுத்துச் செல்ல முடியும். இதில் வாருக்குப் பதிலாகத் திருகாணி பயன்படுத்தப்படுவதால் எளிதில் பழுதடையாது. இதன் பராமரிப்புச் செலவு குறைவு. இவ்வாத்தியம் 8 கிலோ முதல் 10 கிலோ வரை எடைக் கொண்டது.

**அறுமுகனத்தின் வளர்ச்சி நிலை**

புதுவையில் புதுமை வாத்தியமாக அறுமுகனம் விளங்குகிறது. மிருதங்கம் போன்றே இதுவும் ஒரு தாள இசைக் கருவியாகும். இன்றைய காலகட்டத்தில் நடைபெறும் அனைத்து அரசு விழாக்கள், திருமண கச்சேரிகள், தனிப்பாடல் கச்சேரிகள், கருவியிசை கச்சேரிகள் (Fusion Music), தாளவாத்திய கச்சேரிகள் போன்ற அனைத்து கச்சேரிகளிலும் அறுமுகனமானது சிறந்து விளங்குகிறது.

கருவியிசைக் கச்சேரிகளில் மிருதங்கம், கடம், கஞ்சிரா, வீணை, முகர்சிங், வயலின் போன்ற வாத்தியங்கள் இடம் பெறுவது வழக்கம். இதில் சிறுமாற்றம் என்று பார்த்தோமானால் இந்த கருவிகளுடன் அறுமுகனமும் இணைந்து, தற்போது கச்சேரிகள் நடைபெறுவதை நாம் காண முடிகிறது. தாள தரங்கம் என்று பார்த்தோமானால் அறுமுகனத்துடன் மேற்கண்ட அனைத்துக் கருவிகளும் இடம் பெறுகின்றன. அதனுடன் தாரை, தப்பட்டி, கடசிங்காரி, தபேலா, புல்லாங்குழல், பம்பை, உடுக்கை போன்ற கருவிகளையும் சேர்த்து தாளத் தரங்கம் நிகழ்த்தப்படுகிறது.

நாட்டியக் கச்சேரிகளிலும் அறுமுகனம் வாசிக்கப்படுகிறது. தனியாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட அறுமுகனங்களை மட்டுமே வைத்து ‘அறுமுகன இசை’ என்ற தலைப்பில் இசை நிகழ்ச்சிகள் வாசிக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் மாற்றுத்திறனாளி மாணவர்கள், மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் படிக்கும் பள்ளிகளில் அறுமுகனம் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இக்கருவியானது அவர்களுடைய, மனவளர்ச்சியையும், மூளை வளர்ச்சியையும் தூண்டுவதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள்.

**ஊடகங்களில் அறுமுகனம்**

அறுமுகனம் இசைக்கருவியின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளது. நடிகரும், இயக்குனருமான திரு.விசு அவர்கள் நடத்திய மக்களரங்கம் நிகழ்ச்சியில் அறுமுகனம் இசை, மிருதங்கம் இசையும் இணைந்து தாளவாத்திய நிகழ்ச்சியாக வழங்கினார்கள்.

நகைச்சுவை நடிகரும், நாட்டுப்புற பாடகருமான திரு. கருணாஸ் அவர்கள் தொலைக்காட்சியில் பாடிய கருணாசுடன் கலக்கல் கானா என்கின்ற நிகழ்ச்சியில் கிராமிய பாடலுக்கு பல்வேறு இசைக்கருவிகளான (நகரா, தபேலா) சேர்ந்து அறுமுகனமும் இசைக்கப்பட்டது.

லய வின்யாச நிகழ்ச்சிகளுக்கும் செவ்விசை நிகழ்ச்சிகளுக்கும், கிராமிய இசை நிகழ்ச்சிகளுக்கும் வீணை இசை, வயலின் இசை, வாய்ப்பாட்டு இசை, நாதசங்கமம் நிகழ்ச்சிகளுக்கு அறுமுகனம் இசைக்கருவி அரசு தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் வாசித்து வருகின்றனர். அனைத்திந்திய அரசு தொலைக்காட்சியில் அறுமுகனம் உருவாகிய விவரங்கள் குறித்த நேர்க்காணல் ஒளிபரப்பபட்டது.

அறுமுகனம், மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோர்சிங் உள்ளிட்ட தாளவாத்திய கலைஞர்கள் இணைந்து பல நிகழ்ச்சிகள் அரசு தொலைக்காட்சியில் வாசித்து இரசிகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்கள்.

அனைத்திந்திய வானொலி நிலையத்தில் அறுமுகனம் இசைக்கருவியைப் பற்றிய நேர்க்காணல், லய சஞ்சாரம், வாத்திய விருந்து ஆகிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பபட்டது.

இந்தியன் எக்ஸ்ப்ரஸ், ராணி, குங்குமம், கோகுலம் கதிர், மாலை மலர், டெக்கான் குரோனிக்கல், மிரர், மியூசிக் ஜெர்னல் (ஸ்ருதி மேகசின்), ஸரிகமபதநி, தினமலர், தினகரன், தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ், தினமணி உள்ளிட்ட தின இதழ் மற்றும் வார, மாத இதழ்களில் அறுமுகனத்தைப் பற்றி பல செய்திகள், குறிப்புகள் அறுமுகன இசைக் கலைஞர்களின் நேர்க்காணல் மேடை நிகழ்ச்சிகள் வெளிவந்துள்ளன.

அறுமுகனத்தோடு தவில், தக்கு மிருதங்கம், ஸ்தாயி மிருதங்கம், பம்பை, உடுக்கை, கடம், கஞ்சிரா, மோர்சிங், நகரா, கொன்னக்கோலுடன் இணைந்து இசைத்த தாளவாத்திய நிகழ்ச்சி லயம் (குறுந்தகடு) கலைமாமணி திரு. சு.கோபகுமார் அவர்களால் வெளியிடப்பட்டது.

வீணை, புல்லாங்குழல், வயலின், அறுமுகனம் இசைத்து (நாதசங்கமம்) குறுந்தகடு வெளியிட்டுள்ளார். 2019-ல் ராஜீவ் மேனன் இயக்கத்தில் வெளிவந்த சர்வம் தாள மையம் திரைப்படத்தில் இசைக்கலைஞர் ரகுராம் அவர்கள் அறுமுகனம் இசைக்கருவியை வாசித்துள்ளார்.

இணையதளத்தில் www.vidwansgopakumar.com என்கின்ற இணையத்தில் அறுமுகனம் பற்றிய முழு விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளது.

மிருதங்க துணை பேராசிரியர் கலைமாமணி திரு.சு.கோபகுமார் அவர்கள் (அறுமுகனம்) என்ற புத்தகத்தை 6 மொழிகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், ஃபிரஞ்சில் வெளியிட்டுள்ளார்.

**அறுமுகனத்தின் முகங்களின் விளக்கம்**

அறுமுகனத்தின் முகங்களுக்கு அதிலிருந்து வரக்கூடிய ஓசையை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு முகத்திற்கும் பெயரிடப்பட்டுள்ளது. ஆறாவது முகத்தில் ஸ்ருதி சேர்த்தபின் அதனை அடிப்படையாக வைத்தே மற்ற முகங்களுக்கும் ஸ்ருதி சேர்க்க வேண்டும். இம்முகங்களின் நகல் படங்கள் பின்வருமாறு:

**அறுமுகனத்தின் முதல் முகம்**

இம்முகத்தை 'தொம்' என்ற ஒலி எழுப்ப அதிகமாகப் பயன்படுத்துவதால் இதற்கு தொம் முகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இம்முகத்தின் மூட்டு மூன்று தோல்களால் பின்னப்பட்டுள்ளது. அது எருமை மற்றும் ஆட்டின் தோலைக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. இம்முகத்தின் நடுப்பகுதியில் 'தொம்' நாதம் சரிவரக்கிடைக்கச் சாதம் தயாரிக்கப்பட்டுப் போடப்படுகிறது. இம்முதல் முகத்தை இசைக்கும்போது 'த கும் தொம்' என்ற ஜதிகள் எழும்புகின்றன. இவ்வோசைகள் காதுக்கும் இனிமை சேர்க்கின்றன. இம்முகத்தில் தாள வாத்தியத்திற்கே தனிச்சிறப்பாக உள்ள 'கும்கி' ஓசையையும் இசைத்துப் பெறலாம். உயரம் ஏழு (7) அங்குலம் முகத்தின் குறுக்களவு எட்டு (8) அங்குலம் ஆகும்.

**அறுமுகத்தின் இரண்டாவது முகம் 'த முகம்'**

அறுமுகத்தின் இரண்டாவது முகம் 'த' என்ற ஓசையை அதிகமாக வெளியிடுவதால் இம்முகம் 'த' முகம் என அழைக்கப்படுகிறது. இதன் முகத்தை உருவாக்க இரண்டு தோல்கள் பயன்படுகின்றன. இந்த முகத்தை வாசிக்கும் பொழுது த, கி, ட என்ற சொற்கள் (ஜதிகள்) எழும்புகின்றன. உயரம் ஏழு (7) அங்குலம் முகத்தின் குறுக்களவு ஐந்தரை (5½) அங்குலம்.

**அறுமுகனத்தின் மூன்றாவது முகம் 'ம' முகம்**

மத்திய ஸ்ருதியில் 'ம' என்ற ஒலி எழுவதால் இம்முகத்தை 'ம' முகம் என அழைப்பது சால சிறந்தது. இம்முகத்திற்கு இனிமை சேர்க்கும் மூட்டும் மூன்று தோல்களால் பின்னப்பட்டுள்ளது. இதன் மையப்பகுதியில் நாதத்தைச் சிறக்கச் செய்ய கிட்டான் மற்றும் சாதம் இணைந்த பசை தயாரித்து இடப்பட்டுள்ளது.

இந்த முகத்தை இசைக்கும்போது 'ளாம்', 'கி', 'ட' என்ற சொற்கள் (ஜதிகள்) எழும்புகின்றன. உயரம் ஏழு (7) முகத்தின் குறுக்களவு ஆறு (6) அங்குலம் இசை

ISSN: 2582-9513

நிகழ்ச்சிகளில் இசைக்கும் பொழுது 'ம' என்ற சுரத்திற்கும் பதிலாகக் 'க' என்ற சுரத்தைச் சேர்த்து வாசிக்கவும்.

**அறுமுகனத்தின் நான்காவது முகம் 'தீம்' முகம்**

அறுமுகனத்தின் நான்காவது முகம் தாரஸ்தாயில் அமைந்துள்ளது. 'தீம்' ஒலி எழுவதாலும் முகம் 'தீம்' என்று அழைக்கப்படுகின்றது. இம்முகத்தை வாசிக்கும்போது 'தீம்' என்ற நீண்ட ஒலி எழுகிறது. எனவே இதற்கு இத்தகைய காரணப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இம்முகத்தின் மூட்டும் மூன்று தோல்களால் ஆனது. இதன் மையப்பகுதியில் நாதத்தைச் சிறக்கச் செய்ய கிட்டான் மற்றும் சாதம் இணைந்த பசை தயாரித்து இடப்பட்டுள்ளது. இந்த முகத்தை இசைக்கும்போது 'தி', 'ட', 'ளாம்', 'நம்', 'திம்', 'தீம்', என்ற சொற்கள் (ஜதிகள்) எழுப்புகின்றன. உயரம் ஏழு (7) அங்குலம் முகத்தின் குறுக்களவு நான்கரை (4½) அங்குலம்.

**அறுமுகனத்தின் ஐந்தாவது முகம் 'ப' முகம்**

பஞ்சம ஸ்ருதியில் 'ப' என்ற ஒலி எழுவதால் இம்முகத்தை 'ப' முகம் என அழைப்பது சாலச் சிறந்தது. இம்முகத்தின் மூட்டும் மூன்று தோல்களால் ஆனது. இதன் மையப்பகுதியில் நாதத்தைச் சிறக்கச் செய்ய கிட்டான் மற்றும் சாதம் இணைந்த பசை தயாரித்து இடப்பட்டுள்ளது. இந்த முகத்தை இசைக்கும்போது 'தி', 'ட', 'ளாம்', 'நம்', 'திம்', என்ற சொற்கள் (ஜதிகள்) எழும்புகின்றன. இம்முகத்தின் உயரம் ஏழு (7) அங்குலம் வாய் முகத்தின் குறுக்களவு ஆறு (6) அங்குலம்.

**அறுமுகனத்தின் ஆறாவது முகம் 'ஸ' முகம்**

அறுமுகனத்தின் ஆறாவதான இறுதி முகத்தை வாசிக்கும்போது அதிலிருந்து சங்கீதத்திற்கு மிக முக்கியமான ஒலியான 'ஸ' என்ற ஒலி எழுகிறது. இம்முகத்தின் மூட்டும்கூட மூன்று தோல்களால் ஆனது. இதன் மையப்பகுதியில் நாதத்தைச் சிறக்கச் செய்ய கிட்டான் மற்றும் சாதம் இணைந்த பசை தயாரித்து இடப்பட்டுள்ளது. இந்த முகத்தை இசைக்கும்போது 'ட', ('ரி'), 'நம்', 'தி', 'ளாம்', 'திம்', என்ற சொற்கள் (ஜதிகள்) எழும்புகின்றன. இம்முகத்தின் உயரமும் ஏழு (7) அங்குலம் முகத்தின் வாய் குறுக்களவு ஏழு (7) அங்குலம்.

**அறுமுகனத்தைத் தயாரிக்கப் பயன்படும் பொருள்கள்**

1. மரங்கள்: பலாமரம், தேக்கு, கருங்காலி, கொடுக்காய்ப்புளி, பூவரசம் மற்றும் சந்தனம்
2. தோல்கள்: எருமை மாட்டுத் தோல், பசுவின் தோல் மற்றும் ஆட்டின் தோல்

ISSN: 2582-9513

3. உலோகம்: இரும்பாலான சட்டங்கள், வளையங்கள் மற்றும் திருகாணி (போல்ட்)
4. கிட்டான் பவுடர் மற்றும் அரிசியிலான சாதத்தின் பசை
5. கயிறு

**முடிவுரை**

அறுமுகண இசைக்கருவி அழகான முழவு இசைக் கருவியாகும். ஆலய நிக்ச்சிகளிலும். தாளவாத்திய நிகழ்ச்சிகளிலும் , நாடகங்களிலும், நாட்டிய நிகழ்ச்சிகளிலும் , தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பலர் வாசித்து புகழ் அடைந்து வந்துள்ளனர். நவீன காலத்தில் உருவான அறுமுகன இசைக்கருவியானது பாரம்பரிய தாள வாத்தியத்தின் அடிப்படையிலேயே உருவாகியுள்ள , இது தோற்கருவிகளில் உருவான புதிய வடிவம் ஆகும்.

இந்த அறுமுகனம் என்ற தாள இசைக்கருவியானது இசை உலகிற்கு ஒரு புதிய வரவாகும். எனவே இவ்வாத்தியத்தைக் கண்டுபிடித்த ஆசிரியரின் புத்தகத்தைத்தவிர வேறு தரவுகள் ஒன்றும் இதற்கு இல்லை.

**அடிக்குறிப்பு**

1. சு. கோபகுமார், அறுமுகனம், சென்னைப் ஃபைன் ஆட்ஸ், சென்னை.